# ஆண்டவரின் திருமுழுக்குப் பெருவிழா.
## 'A" ஆண்டு

**வாசகங்கள் :**
**முதல் வாசகம் : எசா 42: 1-4, 6-7**
**இரண்டாம் வாசகம்: தி.பணி 10: 34-38**
**நற்செய்தி வாசகம்: மத் 3:13-17**

மையக் கருத்து: இயேசு கிறிஸ்துவின் திருமுழுக்கின் வழியாக வெளிப்படுத்தப்படவற்றைக் கண்டுணர்ந்து, அதை உறுதியோடு ஏற்று. கடவுளின் அன்பார்ந்தப் பிள்ளைகளாக நமது அடையாளத்தை வெளிப்படுத்தி வாழ்ந்து அதை நமது வாழ்வின் அன்றாடப் பணிகளின் வாயிலாகப் புதுப்பித்துக் கொண்டு இவ்வுலகில் கிறிஸ்துவின் ஒளியைப் பரவச் செய்வோம்

முன்னுரை:
பல ஆண்டுகளுக்கு முன் தன் வாழ்வில் நடந்த மறக்க முடியாத ஒரு நிகழ்வை என்னிடம் ஒரு மகளின் தந்தை என்னிடம் பகிர்ந்துக் கொண்டார். அவரது மகள் சிறுவயதில் நீச்சல் பயிலச் சென்றாள். ஆனால் அவள் குளத்திற்குள் இறங்காமல் கரையோரத்தில் நின்றுக் கொண்டு பயந்தவாறே பார்த்துக் கொண்டிருப்பாள். ஒருநாள் அவள் தந்தை சட்டெனக் குளத்து நீரில் குதித்துவிட்டுத் தன் கைகளை உயர்த்தியவாரே "மகளே பயப்படாதே நான் இங்கே தான் இருக்கிறேன் என்னை நம்பு" என்று உரக்கக் கத்தினார். கரையில் நின்றுக் கொண்டிருந்த மகளின் முகத்தில் ஒரு மாற்றம் தெரிந்தது. அந்த மாற்றத்தின் காரணம் அவளது பயம் தெளிந்து துணிவு வந்து விட்டதால் ஏற்பட்டது அல்ல. அவள் தன் தந்தையின் குரலைக் கேட்டாள். தான் பத்திரமாக இருப்பதை உணர்ந்தாள். உடனே குளத்து நீரில் குதித்தாள். பின்னர் தானாக எல்லாம் சரியாக ஆயிற்று. அவள் நீச்சல் கற்றாள்.

மேற்சொல்லப்பட்ட நிகழ்வையொத்த ஒரு நிகழ்வையே நாம் இன்றுக் கொண்டாடுகிறோம். இயேசு யோர்தான் ஆற்றுக்குள் காலடி எடுத்து வைத்தார். வானங்கள் திறக்கப்பட்டன.தந்தை உரத்தக் குரலில் "என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என முழங்கினார். அந்த நேரம் முதல் இயேசுவின் மறைப்பணி துவங்கியது. அவரது பணியை அவர் தன் விருப்பப்படி தனிமையாகவோ, நிச்சயமற்ற நிலையிலோ துவங்கவில்லை. ஆனால் தம் தந்தையின் அன்பிலிருந்தே துவங்கினார்.

நமதுத் திருமுழுக்கின்போதும் இறைவன் நம் ஒவ்வொருவருக்கும் "நீ என்னுடையவன்/ என்னுடையவள், நீ என்னால் அன்பு செய்யப்படுகிறாய், நீ என்னால் அழைக்கப்பட்டிருக் கிறாய்" என்றுக் கூறுகிறார்.

மறையுரை: "நாம் உயர்ந்திட அவர் இறங்கி வந்தார்"

சில ஆ்ண்டுகளுக்கு முன் எனது பங்கு மக்களில் ஒருவர் தனது பேத்தியைப் பற்றிய ஒரு சிறிய கதையை என்னிடம் பகிர்ந்துக் கொண்டார்.

அவளது ஐந்தாம் ஆண்டு பிறந்தநாள் அன்று அவளுக்கு ஒரு உலக உருண்டை வாங்கித் தரப்பட்டது. அவள் அந்த உலக உருண்டையை பல முறைகள் தன் கைகளால் சுழற்றிக் கொண்டே தன் விரல்களால் தான் பிற்காலத்தில் சென்றுப் பார்க்க விரும்பும் கடல்கள், நாடுகள் மலைகளைத் தொட்டுக் கொண்டே வந்தாள். பின்னர்அந்த உலக உருண்டை சுழல்வதை நிறுத்திவிட்டுத் தன் தாத்தாவைக் கூப்பிட்டு அந்த உலக உருண்மையிலிருந்த ஆஸ்திரேலியா கண்டத்தை சுட்டிக் காட்டி "நான் இங்கிருந்துதான் வந்தேன் இல்லையா?" என்றுக் கேட்டாள். ஆனால் தாத்தா அவளிடம் "அப்படி சொல்லிவிட முடியாது. நீ கடவுளிடமிருந்துதான் வந்திருக்கிறாய். கடவுள் உனக்கானத் திட்டத்தை வைத்திருக்கிறார்" என்றார். தாத்தா சொன்னதைக் குறித்து ஒரு நிமிடம் சிந்தித்த அவள் அந்த உலக உருண்டையை மார்போடு அணைத்துக் கொண்டு "கடவுள் எங்கும் இருக்கிறார். இந்த உலக உருண்மையினுள்ளும் இருக்கிறாா" என்று வியந்தக் கூறினாள். இது ஒரு குழந்தையின் வாயிலிருந்து வெளிப்பட்ட வாக்கு.

இயேசு எங்கிருந்து வந்தார்? ஏன் வந்தார்? அவர் எங்குச் சென்றார்?" என்பதை சிந்திக்க இன்றைய இயேசுவின் திருமுழுக்குப் பெருவிழா நம்மை அழைக்கிறது..

**1. இயேசு யோர்தான் ஆற்றில் இறங்குதல்:**

ஒரு திருப்பயணி சரியான குளிர் காலத்தில் யோர்தான் ஆற்றக்குத் திருப்பயணியாகச் சென்றார். அவா தன் மனத்தில. அது ஒரு கரைபுரணடோடும் பெரியாக ஆறாக, நுங்கும் நுலையுமாக வெள்ளமாகத் துள்ளிக் குதித்தோடும் ஆறாகக் கற்பனை செய்துக் கொண்டு அங்கு வந்தார். ஆனால் அவர் கண்டக் காட்சி அதற்கு நேர்மாறானதாக இருந்தது. அங்கே மெல்லிய சேறுக் கலந்த நீர் ஓடிக்கொண்டிருந்தன. அதன் கரையெங்கும் புறகள் புதராக வளர்ந்திருந்தன. அதில் ஓடிக்கொண்டிருந்த மெல்லிய நீர் போட்டோ எடுப்பதற்குக் கூட இயலாதவாறு மிக மெல்லியதாக இருந்தது. "இதைப் பார்க்கவா இத்தனை தொலைவு பயணப்பட்டு வந்தேன்? என்று அங்கலாய்த்தார் அந்தத் திருப்பயணி. அவருக்க வழிகாட்டியாக வந்தவர் அவளிடம் "இந்த இடத்தை நோக்கித்தான் விண்ணகம் இறங்கி வந்தது" என்றார்
பல சமயங்களில் கடவுள் மாபெரும் அருள்வளங்களை வெளிப்படுத்த மிக எளிமையான இடங்களையே தேர்ந்துக் கொள்கிறார்.

"அப்பொழுது இயேசு கலிலேயாவிலிருந்து கிளம்பி திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்றுக் கொள்ள தோர்தானுக்கு வந்தார்" என்று நற்செய்திக் கூறுகிறது.

யோர்தான் நதி என்றால் மேலிருந்து கீழ் நோக்கிப் பாயும் நதி எனப்பொருள். இந்நதி ஹெர்மோன் மலையில் உற்பத்தியாகி சாக்கடல் வரை 1000 மீட்டர்கள் பயணிக்கிறது. இந்த கீழிறங்கி ஓடும் யோர்தானில் திருமுழுக்குப் பெற இயேசு கீழிறங்கி வருகிறார். இயேசுவின் இந்த "இறங்குதல்" புவியியல் சம்பந்தப்பட்டது மட்டுமல்ல அது ஒரு இறையியலுமாகும். இயேசுவின் மொத்த வாழக்கையையும் பார்க்கும் போது அது ஒரு "இறக்குமுகமான வாழ்வாகவே" உள்ளது.

- விண்ணக மாட்சியிலிருந்த மாடடைக் குடிலில் பிறக்க இறங்கி வந்தார்
- இறைமையின் முழுமையிலிருந்து பசிக்கும், சோர்வுக்கும் ஆளாகும் நிலை
- விண்ணகத்தின் உயரத்திலிருந்து நாசரேத்து என்னும் தாழ்வான இடத்திற்கு இறங்கினார்.
- கலிலேயா என்ற உயரமான மலையிலிருந்த சேறு கலந்த நீர் ஓடிக்கொண்டிருக்கும் யோர்தான் ஆற்றிற்கு, பாவிகள் தங்களைத் தூய்மைப்படுத்திக்கொள்ள வரிசையில் நிற்கும் இடத்திற்கு இறங்கி வந்தார்.

புனித பவுலடியார் "அவர் தம்மையே வெறுமையாக்கிக் கொண்டு ஒரு பணியாளனின் வேடம பூண்டார்" என்கிறார். இன்றம் கிறிஸ்து நமக்காக இறங்கி வருகிறார், குனிந்து வளைகிறார், நமக்காக மிகச் சிறியவராகிறார்.
ஒரு துறவி இயேசுவைக் குறித்து "இயேசு எங்கே போகிறார் என்று நாம் கவனித்துப் பார்த்தால் அவர் எப்போதும் உயரத்திலிருந்து தாழ்வான இடங்களை நோக்கியே செல்கிறார். அப்படி போகும் வழியெல்லாம் அவரிடமிருந்து அருளை வழிந்தோடி கீழ்நோக்கிப் பாய்கிறது" என்கிறார். யோர்தான் ஆற்றிலே இயேசுவின் அருள் அவரிலிருந்துக் கீழ்நோக்கிப் பாய்கிறது. எனவே அந்த அருள் அவரது உயிர்பபின் நாளில் அந்த அருள் மேல் நோக்கிப் பாயும்.

**2. ஏன் இயேசு திருமுழுக்குப் பெற்றார்? அதற்கான மூன்றுக் காரணங்கள்:**
ஒரு ஆரம்ப நிலைப் பள்ளியில் ஒருநாள் பிள்ளைகள் அனைவரையும் தங்கள் உயரத்திற்கு ஏற்ப வரிசையில் நிற்க வைத்தனர். வரிசையின் கடைசியில் ஒரு உயரமான மாணவன் ஆசிரியர்களின் உயரத்திற்கு வளர்ந்திருந்தவன், நின்றுக் கொண்டிருந்தான். அப்போது அதை கவனித்த ஆசிரியர்களில் ஒருவர் "நீ இந்த பிள்ளைகள் மத்தியில் மிக உயரமாக தெரிகிறாய். எனவே நீ ஆசிரியர்களான எங்களோடு வந்து நின்றுக் கொள்" என்று அழைத்தார். அந்த மாணவன் அதை ஏற்காமல் மறுத்து விட்டு "அங்கே தான் என் நண்பர்கள் நிற்கிறார்கள். என் நண்பர்களுடன் நிற்பதையே நான் விரும்புகிறேன்". என்றான்.
அதன் பின்னர் அந்த ஆசிரியர் "நட்பு, நண்பர்கள் என்றால் என்ன, அதன் மதிப்பு என்ன என்பதைக் குறித்து நான் படித்த அத்துணைக் கல்விப் பாடப்பிரிவுகளைவிட அன்றுத் தான் அதிகமாகத் தெரிந்துக் கொண்டேன்.

இயேசு கூட நம்மோடு நிற்பதையே விரும்புகிறார். இயேசு திருமுழுக்கு யோவானிடம் தமக்கு திருமுழுக்குத் தரக் கேட்டபோது அவர் அதிர்ச்சியடைந்து "நான் தான் உம்மிடமிருந்து திருமுழுக்கு பெற வேண்டியவன் ஆனால் நீரோ என்னிடம் வருகின்றார்". நாமும் இயேசு நம்மிடம் வரும்போது இத்தகைய தடுமாற்றத்திற்குள்ளாகிறோம்.
அ. இயேசு நாம் எத்தகைய நிலையில் இருந்தாலும் அங்கே வந்துவிடுகிறார். லூக்கா நற்செய்தியாளர் "அனைத்து மக்களும் திருமுழுக்குப் பெற்றப்பின் இயேசுவும் திருமுழுக்குப் பெற்றார்." என்கிறார். இயேசு பாவிகளின் வழியில் வருவதையே விரும்புகிறார்.

ஆ. இயேசு தமது திட்டம் என்ன என்பதை தெளிவுப்படுத்துகிறார். அதுதான் "தந்தையின் திருவுளததிற்குக் கீழ்ப்படிதல்". "இப்பொழுது விட்டுவிடும். கடவுளுக்கு ஏற்புடையவை அனைத்தையும் நாம் நிறைவேற்றுவதுதான் முறை" என்றார். இதுவே அவரது வாழ்வு முழுவதுக்குமான திட்டமாக இருந்தது.

இ. இயேசு கடவுளின் இதயத்தை வெளிப்படுத்துகிறாா.
வானம் திறக்கப்படுகிறது.
தூய ஆவி விண்ணிலிருந்து இறங்கி வருகிறார்.
"இவரே என் அன்பார்ந்த மைந்தர்"என்கிறார் தந்தையாம் இறைவன்
ஒரு மென்மையான இறைத்திருக்காட்சி அங்கே நிகழ்ந்தேறுகிறது.

மறைக்கல்வி வகுப்பில் ஒரு குழந்தை கூறிய வார்த்தைகள் எத்தனை பொறுத்தமானவை --
"கிறிஸ்து கடவுளின் மகன் என்றால். அவரது திருமுழுக்கின் போது அவரது தந்தையும் "அதோ அவர்தான், அந்த ஒருவர் தான்" என்றே கூறியிருப்பார்.

3. நமது திருமுழுக்கின் போதும் இதையே நம் ஆண்டவர் நமக்கும் கூறுகிறார் :

ஒரு பாட்டி தன்னிடமிருந்த ஷூக்கள் போட்டு வைக்கப்படும் பெட்டியில் தனது பேரக் குழந்தைகளின் திருமுழுக்கின் போது பயன்படுத்தப்பட்ட மெழுகுத்திரிகளை வைததிருந்ததை என்னிடம் காட்டி "அவர்கள் தங்களது அந்த நாட்களை மறந்துவிட்டனர். எனவே அவர்களுக்காக நான் அவற்றை நினைவில் வைத்திருக்கிறேன். இதில் உள்ள ஒவ்வொரு மெழுகுத் திரியும் ஒரு கதையை உள்ளடக்கியது. அதாவது ஒவ்வொரு குழந்தையும் கடவுளுககுப் பிரியமானவைகளாக ஆன கதையே அது" என்றுக் கூறி முடித்தாள்.

நாம் நமது திருமுழுக்கின் நாளை நினைவில் வைத்திருப்பத மிகவும் நல்லது. ஆனால் அப்படி யாருமே நினைவில் வைத்திருப்பதில்லை. ஆனால் புனதர்கள் "நமது வாழ்வின் மிக மின முக்கியமான நாள் நாம் திருமுழுக்குப் பெற்ற நாளே" என்பதை வலியுறுத்துகின்றனர். ஏனெனில் தான் நம் ஒவ்வொருவரையும் பார்த்து நம் இறைவன் நம்மைப் பார்த்து "நீயே என் அன்பார்ந்த மகள். நீயே என் அன்பார்ந்த மகன். உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என்கிறார்.

பல கிறிஸ்துவர்கள் கடவுளின் இந்தக குரலை கேட்பதற்கு திணறுகிறார்கள், போராடுகிறார்கள். ஏனெனில் அவர்கள் காதுகளில் விழுவதெல்லாம் காரண காரியத்துடன் பொழியப்படும், பலனை எதிர்ப்பார்த்துப் பொழியப்படும் அன்புதான். இத்தகைய அன்பு இறைவனின் எதையும் எதிர்ப்பார்க்காத அன்பை மூழ்கடித்து விடுகிறது.

நம் பல சமயங்களில் கேட்டு உள் வாங்கியவை இவையே

- "நீ நல்லவனாக/நல்லளாக இருந்தால் -- நீ அன்பு செய்யப்படுவாய்"
- "நீ எதையும் சரியாக செய்தால் - நீ ஏற்றுக் கொள்ளப்படுவாய்"

மேற்கண்டவற்றையே கேட்டு உள்வாங்கி வளரும்போது நாம் நாமாக இருப்பதில்லை.

நாம் அனைவருமே அசலாகத் தான் பிறக்கிறோம் -- ஆனால் நம்மில் அநேகர் நகல்களாக இறக்கிறோம்".

ஆனால் திருமுழுக்கு வேறொரு உண்மையை நமக்கு உரக்கக் கூறுகிறது
கடவுள் நாம் நாமாகவே இருப்பதில் தான் மகிழ்கிறார்
கடவுளின் குரலை நாம் கேட்க வேண்டுமெனில், அதற்கான மூன்று அருளின் வழிகளைக் காட்டுகிறார் புனித இஞ்ஞாசியார் --

1. நேர அனுபவம்
2. தினமும் செயயும் பக்தி முயற்சிகள்
3. அமைதியான முறையிலட பகுத்துணர்தல்

நமது உள்ளுணர்வில் பாயும் யோர்தானில் தாம் நாம் கடவளின் குரலை மறுபடியும் கேட்க முடியும்.

4. யோர்தான் நமது எல்லைக்கோடு -- வாழ்வு, இறப்பு. கடந்து செல்லுதல்

ஒரு அருட்தந்தை இறக்கும் தறுவாயிலிருக்கும் ஒரு மனிதனைக் குறித்து தனக்கு ஏறபட்ட அனுபவத்தை பகிர்ந்துக் கொண்டார். இறக்கும் தறுவாயிலிருந்த அந்த மனிதன் அந்த அருட்

தந்தையிடம் "தந்தையே நான் இப்போது ஒரு ஆற்றின் கரையில் நின்றுக் கொண்டிருக்கிறேன்" என்றார். அவரது குடும்பத்தினர் அவர் ஏதோ குழப்பத்தில் உளறுகிறார் என்று எண்ணினர். ஆனால அவர் சரியான அறிவுத் தெளிவோடு இருந்தார். மீண்டும் அவ் "நான் இப்போது நீர் பாயும் சப்தத்தைக் கேட்கிறேன். ஆனாலும் நான் இந்த ஆற்றைக் கடப்பதற்கு அச்சப்பட வில்லை. யாரோ எனக்காக அந்த ஆற்றைக் கடந்துவிட்டார்." என்றுக் மூறினார். அன்று இரவே அவர் மிகுந்த அமைதியோடு உதட்டில் ஒரு புன்னகையோடு இறந்துப் போனார்.

யோர்தான் எப்போதும் கடந்தச் செல்லுதலின் அடையாளமாக இருக்கிறது --

- இஸ்ரயேல் மக்கள் யோர்தான் ஆற்றைக் கடந்து வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கள் நழைந்தனர்.
- யோர்தானின் கரையிலிருந்தே மோசே வாக்களிக்கப்பட்ட நாட்டைக் கண்டார்.
- இப்போதும் நாம் இறந்தோரைக் குறித்துப் பேசுகையில் "அவர் போர்தானைக் கடந்து சென்றுவிட்டாா" . என்கிறோம்.
- இயேசுயோர்தானில் இறங்கியவுடனே தமது இறப்பையும் உயிர்ப்பையும் தன் முன் உருவகப்படுத்தப்படுவதைக் காண்கிறார்.
- அவர் மனிதரின் பாவஙகள், அவாகளின் துன்ப துயரஙகள், இறப்பு ஆகியவற்றிற்குள் இறங்கி வருகிறார். இந்தத் தாழ்வான இடங்களுக்கு இறங்குகையில் இத்தகைய இடங்களும் இறைவனால் புறக்கணிக்கப்படுவதில்லை என்பதை உணர்த்துகிறார்.
- அவரது இறங்குதல் அவரது கல்லறையில் முடிகிறது. ஆயினும் அது நிறைவடைவது அவரத தந்தையின் கரங்களில் தான்.

5. அவருக்குபட பரியமான மகளாக/ மகனான வாழவே அழைக்கப்படுகிறோம்:

ஓவிய ஆசிரியை தன் வகுப்பு மாணவ மாணவியருக்கு வ்ண்ணம் தீட்டக் கற்பித்தார். அவர் அவர்களிடம் "நீங்கள் வண்ணம் தீட்டும் தூரிகையைத் தேர்ந்தெடுக்கும் முன் ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். உங்கள் உள்ளத்தில் உள்ள எண்ணங்களை வெளிக்கொணரும் வண்ணம் வண்ணம் தீட்டுங்களட மாறாக அச்ச உணர்வுனோ, மற்றவர்களின் வற்புறுத்தல் களுக்கு ஏற்பவோ வரையாதீர்கள். நீங்கள் யார் என்று உண்மையாக உங்களை வெளிப்படுத்தி வண்ணம் தீட்டுங்கள்:" என்றார். பின்னாளில் அந்த வண்ணம் தீட்டலில் கலந்துக் கொண்ட மாணவர்களில் ஒருவர் "அன்று அந்த ஆசிரியை அளித்த அறிவுரை நான் எப்படி வண்ணம் தீட்ட வேண்டும் என்பதை மட்டுமல்ல நான் எப்படி வாழ வேண்டும் என்பதையும் கற்பித்தது." என்றுப் பகிர்ந்துக் கொண்டார்.

கிறிஸ்துவ வாழ்வு என்பதும் உளப்பூாவமான வாழ்வையே உள்ளடக்கியது. அது அன்பை மையப்படுத்திய, அடித்தளமாகக் கொண்ட வாழ்வாகும்.

திருமுழுக்கின் போது ஒவ்வொரு குழந்தையின் காதும் குருவானவரால் தொடப்பட்டு "எப்பத்தாஅதாவது திறக்கப்படு" எனக் கூறப்படுகிறது -- எதற்காக?

- அன்பிற்காக திறக்கப்பட வேண்டும்
- பணிக்காகத் திறக்கப்பட வேபண்டும்

நாம் நம் இதயங்களை மறுபடியும் திறக்க வேண்டும் --

- இதயத்தில் எழும் பழைய பழிச்சொற்களை அமைதிப்படுத்த வேண்டும்
- சுயமதிப்பீடு செய்துக் கொள்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.
- தந்தையாம் இறைவனின் பரிவுள்ளத்தை நம்பி ஏற்க வேண்டும்.

ஒரு ஆன்மீக இயக்குநர் இதை இவ்வாறு ஒழுங்குப்படுத்திக் கூறுகிறாா --
"நீங்கள் இறையன்பிற்கு உரிமைப் பேறுள்ளவர்களாகும்படிக்கான எதையும் செய்யும் முன்னமே நீங்கள் அன்பு செய்யப்படுகிறீர்கள் என்பதில் பற்றுறுதியோடு இருப்பதே கிறிஸ்துவ வாழ்வு". இதுவே உண்மையான கீழ்ப்படிதல் வாழ்வு. இது வெறம் சட்ட திட்டங்களைக் கடைப்பிடிப்பதில் அடங்கியதல்ல ஆனால் கடவுளின் நிபந்தனையற்ற அன்பில் அமைதியாகத் தங்கி இருப்பதே.

6.இறுதியாக ஒரு கதை - யோர்தானை இன்றைய நாளில் கடத்தல்:

ஒரவா என்னிடம் தனது தாத்தாவைப் பற்றிப் பகிர்ந்துக் கொண்டார். அவர் ஒரு அதைியான விவசாயி, புனனகைத் தவழும் முகத்தினர். அவர் இறந்தப் பின்னர் அவரது செபப் புததகத்தில் ஒரு சிறு குறிப்பு எழுதப்பட்ட துண்டு சீட்டு இருந்தது. அதில் "ஒருநாள் நான் அந்த ஆற்றைக் கடக்க வேண்டும். நான் எதற்கும் அஞ்சமாட்டேன் என்று எண்ணுகிறேன். ஆனால் எனக்கு முன்பே ஒருவர் அந்த ஆற்றில் இறங்கிச் சென்றிருக்கிறார். அவர் அங்கே இருந்தால நான மூழ்கிப் போக மாட்டேன்".

இைாதத்தான நம் ஆண்டவரின் திருமுழுக்கு நமக்கு வாக்களிக்கிறது.

அவர் தமக்காகக் கீழே இறங்கி வந்தார் எனவே நாம் மேலே எழுகிறோம்.

அவர் நமக்கு முன் தண்ணீரில் இறங்கிவிட்டார். எனவே நாம் அந்த ஆற்றைக் கடக்கும் போது தனிமையாக விடப்படப் போவதில்லை.

ஏனெனில் அவர் ஆற்றின் உள்ளே சென்றிருக்கிறார். எனவே நாம் அவரால் உயர்த்தப்படுவோம்.

முடிவுரை:

இள்ரு தற்தையாம் கடவுள் இயேசுவை நமக்குச் சுட்டிக்காட்டி "இவரே என் அன்பார்ந்த மகன்" என்கிறார். இன்று நமது திருமுழுக்கின் போது தந்தையாம் கடவுள் அதையே சொல்கிறார். எனவே கிறிஸ்துவோடு நாம் யோர்தானில் அடியெடுத்து வைப்போம் --

- அவரது தாழ்ச்சியில்
- அவரது கீழ்ப்படிதலில்
- அவரது அன்புறவில்

நிலைத்திருந்து நாம் அவரோடு ஆற்றைக் கடந்து சவாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழைவோம் அங்கே நம் தந்தையாம் இறைவன் தமது மகன் / மகள்களின் வருகைக்காகக் காத்திருக்கிறார் -- ஆமென்.